# முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து 23–10–2006 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

முல்லை பெரியாறு பிரச்சினை குறித்து தமிழக அரசின் சார்பாக எடுத்துவைத்த நியாயங்களை ஏற்றுக்கொண்டு உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு முன் வராத கேரள அரசின் போக்கைச் சுட்டிக்காட்டி, உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நல்லெண்ண சமிக்ஞையாக, மத்திய அரசு முன்னிலையில் தமிழக அரசு கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இக்கூட்டம் இணக்கம் தெரிவிக்கிறது; என்றாலும் –

அதிலும் உரிய பலன் கிடைக்காதபட்சத்தில் மீண்டும் உடனடியாக உச்ச நீதி மன்றத்தையே அணுகி உச்ச நீதி மன்றம் 27–2–2006இல் பிறப்பித்த உத்தரவான அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்பதையும்; அணையைப் பலப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளும்போது கேரள அரசு முழு ஒத்துழைப்பு அளிப்பதுடன், தமிழக அரசுக்கு கேரள அரசு அதிகாரிகள் எந்தவித இடையூறையும் ஏற்படுத்தக் கூடாது என்பதையும்

நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உத்திரவளிக்குமாறு முறையீடு செய்து கொள்வதென்றும்; அத்தகைய உச்ச நீதி மன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (23.10.2006) சென்னை தலைமைச் செயலகத்தில் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு ந.வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் ஆகியோரும் அனைத்துக் கட்சிகளின் சார்பாக பின்வரும் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

| வ. எண். | கட்சியின் பெயர் | கலந்து கொண்டோர் பெயர் |
|---|---|---|
| 1. | திராவிட முன்னேற்றக் கழகம் | பேராசிரியர் திரு க.அன்பழகன் |
| 2. | இந்திய தேசிய காங்கிரஸ் | 1. திரு. எம். கிருஷ்ணசாமி<br>2. திரு. சுதர்சனம் |
| 3. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | 1. திரு. ஓ. பன்னீர்செல்வம்<br>2. திரு. கே.ஏ.செங்கோட்டையன் |
| 4. | பாட்டாளி மக்கள் கட்சி | 1. திரு கோ.க. மணி<br>2. திரு. ஏ.கே.மூர்த்தி |
| 5. | மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி | 1. திரு. என். வரதராஜன்<br>2.திரு. கே. பாலகிருஷ்ணன் |
| 6. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 1. திரு சி. மகேந்திரன்<br>2. திரு வி. துரைமாணிக்கம் |

| | | |
|---|---|---|
| 7. | மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் | 1. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்<br><br>2.திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன் |
| 8. | தேசிய முற்போக்கு திராவிட கழகம் | 1. திரு. விஜயகாந்த்<br><br>2. திரு. பண்ருட்டி ச. ராமச்சந்திரன் |
| 9. | தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக் | 1. திரு கே.எம்.காதர் முகைதீன்<br><br>2. திரு எஸ். ஏ.அப்துல் சையத் சத்தார் |
| 10. | விடுதலை சிறுத்தைகள் | 1. திரு. தொல்திருமாவளவன்<br><br>2. திரு. செல்வப்பெருந்தகை |
| 11. | பாரதீய ஜனதா கட்சி | 1. திரு.இல.கணேசன்<br><br>2. திரு.எச். இராசா |
| 12. | திராவிடர் கழகம் | 1. திரு. கி. வீரமணி<br><br>2. திரு. சு. அறிவுக்கரசு |
| 13. | புரட்சி பாரதம் | 1. திரு. பூவை. ஜெகன் மூர்த்தி |
| 14. | தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் | 1. திரு. ஜவாஉறிருல்லாஉற்<br><br>2. திரு. எஸ். ஹைறதர் அலி |
| 15. | எம்.ஜி.ஆர். கழகம் | 1. திரு. இராம. வீரப்பன்<br><br>2. திரு. ராஜ்குமார் |
| 16. | ஜனதா கட்சி | 1. டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி<br><br>2. திரு ஜி.என்.ஷ்ரீதரன் |

| | | |
|---|---|---|
| | | |
| 17. | தமிழ் மாநில தேசிய லீக் | 1. திருப்பூர் திரு. அல்தாப்<br><br>2.திரு சம்சுதீன் |
| 18. | அகில இந்திய பார்வர்டு பிளாக் (வல்லரசு) | 1. திரு.கதிரவன்<br><br>2. திரு.ஐ.இராசா |
| 19. | உழவர் உழைப்பாளர் கட்சி | 1. திரு.செல்லமுத்து<br><br>2. திரு.நல்லாக்கவுண்டர் |
| 20. | புதிய தமிழகம் | 1. டாக்டர் கிருஷ்ணசாமி |
| 21. | இந்திய சமூகநீதி இயக்கம், | 1. பேராசிரியர் எஸ்றா சற்குணம்<br><br>2. ரெவரண்ட் தனசீலன் |
| 22. | பெரியாறு நீரினை பயன்படுத்துவோர் சங்கம் | 1. திரு. க. மீனாட்சி சுந்தரம்<br><br>2. திரு.ஆர்.கே. ராமச்சந்திரன் |
| 23. | தமிழ்நாடு மாநில விவசாயிகள் தொழிலாளர் கட்சி | 1. திரு.பொன்.குமார் |